



## அச்சம் - நாணம்

அச்சம் நாணம் என்பதெல்லாம்
காதலின் முன்பு கானல்தான்
கண்டால் மனதில் தோன்றுவது
காற்றை விடவும் வேகம்தான்!

இமயத்தைக்கூட எட்டிவிடுவேன்
உன் இதயத்தை மட்டும் முடியவில்லை
இரும்புக் கோட்டையா உன்னெஞ்சம்
காதல் சுனாமியே என்
ஆற்றாமை புரிந்து கொள்ளடி!

ஆசைப்பட்டதை அடைந்தால்தானே
ஆனந்த ராகம் பாடமுடியும்
ஏனிந்தத் தயக்கம் இளையவளே
தேன் சிந்தும் வேளையிது
தேவியே சரண் அடைந்தேன்